

11வது ஞானாச்சாரியார்

# ஞானாச்சாரியார்

## ஞாலகுரு சித்தர் அரசயோகிக் கருவூரார்

## அவர்களின் எழுத்துக்கள்





12வது ஞானாச்சாரியார்

**வைகாசி மாத வெளியீடு**

**பதினெண்சித்தர்கள் வகுத்தளித்த மெய்யான இந்துமத ஆண்டு 43,73,112**

***இந்த இதழின் உள்ளடக்கம் தமிழராகப் பிறந்து வட நாட்டவர்க்காக சமசுக்கிருத மொழியில் தமிழர் மதக் கருத்துக்களை எழுதிய காலடி ஆதிசங்கராச்சாரியாரைப் பற்றிய வரலாற்றுக் கட்டுரைகளாக உங்களுடைய சிந்தனைக்கு அளிக்கப் படுகின்றது.***

1. கண்டப்பக் கோட்டைக் கருவூரார் எழுதிய ஆதிசங்கரர் வரலாறு.
2. 12வது பதினெண்சித்தர் பீடாதிபதியின் எழுத்துக்களிலிருந்து சங்கரர் வரலாறு.
3. தமிழினத் தாழ்ச்சி நிலை தொடர்ச்சி நிலையாவதற்குக் காரணம் தமிழின ஆச்சாரியார்களையும் தமிழர்களின் கடவுள்களையும் அன்னியர்களான பிருமணர்கள் தங்களுடைய இனத்தவராகப் பொய் கூறித் தமிழர்களை நம்ப வைத்ததுதான். அப்பாவித் தமிழர்களும் சிறிது கூட ஐயம் கொள்ளாமல் பிருமணர்கள் கூறும் கட்டுக் கதைகளை அப்படியே ஏற்றுக் கொண்டு வாழுவதுதான் தமிழினத் தாழ்ச்சியை தொடரச் செய்கின்றது.

*(i) தமிழர்களின் மதம் மொழி பற்றிய மெய்யான செய்திகள்...*
*(ii) காலடி ஆதிசங்கராச்சாரியார் ஒரு தமிழரே!*
*(iii) காலடி ஆதிசங்கராச்சாரியாரைச் செயல்படச் செய்தது 11வது பதினெண்சித்தர் பீடாதிபதியே!*
*(iv) காலடி ஆதிசங்கராச்சாரியார் திருஞானசம்பந்தரின் மறு அவதாரமே.*
*(v) காலடி ஆதிசங்கராச்சாரியாரின் சமசுக்கிருதப் பணி.*
*(vi) காலடி ஆதிசங்கராச்சாரியார் தயாரான விதம்.*
*(vii) இமயமலைச் சாரல் இருடிகளும் காலடி ஆதிசங்கராச்சாரியாரும்.*
*(viii) காலடி ஆதிசங்கராச்சாரியாரின் சிறப்பு மாணாக்கன் கரூர் சந்தானம் பற்றி.*
*(ix) மெய்யான இந்துமதத்தின் மூல ஆச்சாரியார்கள் எண்மர் பற்றி.*
*(x) தமிழர்கள் காலடி ஆதிசங்கராச்சாரியாரை மறந்தார்கள், ஏமாந்தார்கள்.*
*(xi) கருவூர்த் தேவர் தமது எழுத்துக்களை மறையாகக் காத்ததற்கான காரணம்.*
*(xii) திருமாளிகைத் தேவரின் குருபாரம்பரிய வாசகங்களிலிருந்து...*
*(xiii) பிருமணர்களின் உகப்புரட்டு.*
*(xiv) காலடி ஆதிசங்கராச்சாரியார் எழுதியவைகளுக்கு தமிழிலக்கியங்களே அடிப்படை.*
*(xv) காலடி ஆதிசங்கராச்சாரியார் சமசுக்கிருதத்தில் எழுதியதின் பின்விளைவு.*

www.indhuism.org
Email: indhuism@gmail.com
Cell: 9972130609

**தமிழினத்தாரில் சித்தர் நெறியின் மீது ஈர்ப்பு உள்ளவர்களுக்கு அனுப்பப்படும் சுற்றறிக்கை. இதை நகலெடுத்துப் பிறருக்குப் படிக்கக் கொடுக்கவும்.**

# ஞானசித்தர் ஆதிசங்கரர்



**[வெள்ளாடை மேனியான், உச்சிக் குடுமியான், தென்பாண்டித் தமிழன், தமிழின் இந்துமதத்தைச் சமசுக்கிருத ஹிந்துமதமாக்கியோன்]**

## ஆதிசங்கரர் வரலாறு

**[கருவூரர் வழிவந்த கண்டப்பக் கோட்டைச் சித்தர் ஏளனம்பட்டியார் உ. இராமசாமி பிள்ளை அவர்கள்]**

'ஆதிசங்கரர்' என்ற பெயர் இவர்தான் முதல் சங்கரர் என்ற பொருளில் வழங்கப்பட்டது அல்ல! ஆதிசிவன், ஆதிசங்கரன், ஆதிபரமசிவன், ஆதிவேதன், ஆதிநாதன் ... என்ற பெயர்கள் சாதாரணமாக வழக்கில் உள்ளவைகள்தான். மேலும், ஞானத்துக்கே உரிய வைகாசித் திங்களில் சிவனுக்கே உரிய திருவாதிரை மீனில் (நட்சத்திரம்) வளர்பிறையில் பிறந்த ஆண்குழந்தைக்கு மேற்படி ஆதிசிவன், ஆதிசங்கரன்... என்கின்ற பெயர்கள் வைப்பதே மரபாகும். இதுவே பிறப்பியல் சாத்திரத்திலும், பெயரியல் சாத்திறத்திலும் உள்ள உண்மை.

இன்றுள்ள மலையாள மொழி தோன்றி சில நூறு ஆண்டுகளே ஆகின்றது என்பதால், இந்த ஆதிசங்கரன் பிறந்த காலத்துச் சேரநாடு முழுவதும் தமிழ்மொழி பேசப்பட்டு அது தென்பாண்டித் தமிழகமாகத்தான் இருந்தது. எனவே, ஆதிசங்கரர் ஒரு தமிழ் அந்தணர் குடும்பத்தில் பிறந்தவரே. தமிழால் சிவன் கோயிலில் பூசை செய்யும் குருக்களான தமிழ்ச் சிவாச்சாரியார் குடும்பத்தில் பிறந்தவரே ஆதிசங்கரர். மிகத் தெளிவாகச் சொன்னால் சீர்காழித் திருஞான சம்பந்தர் தந்தையான சிவபாத இருதயரின் வழி வந்த சிவாச்சாரி-யாரான தமிழ் அந்தணர் சிவகுருவின் மகனே ஆதிசங்கரர். ஆதிசங்கரர் தமிழ்ச் சைவ கருணீக்க வேளாளர் குலக் கொழுந்தாய் பிறந்தவரே. [ஆதிசங்கரர் தோன்றிய அதே கருணீக்க சைவ வேளாளர் மரபில், சிவபூசையில் தேறிய சிவாச்சாரியார் குடும்பத்தில் தோன்றிய வடலூர் அருட்பெருஞ்சோதி ஆண்டவர், அருட்கொடை வள்ளல், அருட்பா வழங்கிய பேரருளாளர், ஞானசித்தர் இராமலிங்க அடிகளார் என்பது குறிப்பிடத் தக்கது] எனவே, கருணீக்க வேளாளர் மரபில் பிறந்த தமிழ் அந்தணர் சிவகுரு என்னும் சிவாச்சாரி-யாருக்கும், அவரது மனைவி ஆரியம்மாளுக்கும் [ஆரியம்மாள், ஆரியமாலா, ஆரியமாலை, ஆரியாத்தாள்... முதலிய பல பெயர்கள் ஏடுகளில் குறிக்கப் படுகின்றன. மேலும், இதுபோன்ற பெயர்களான ஆரியம்மாள், மாரியம்மாள், காளியம்மாள்... தமிழர்கள் மட்டுமே வைக்கக் கூடியவை] வைகாசித் திங்களில் வளர்பிறையில் திருவாதிரை நட்சத்திரத்தில் காலடியில் பிறந்த ஆண்மகவே 'ஆதிசங்கரன்'.

பதினோராவது பதினெண்சித்தர் பீடாதிபதி சித்தர் காவிரியாற்றங்கரைக் கருவூரர் கி.பி.785இல் முதல் விசயாலயனை அரசுக் கட்டிலில் அமர்த்தி அருட்பேரரசுக்கு வித்திட்டு விட்டு உலகச் சுற்றுப் பயணம் சென்று

திரும்பிய காலத்தில் தென்பாண்டி தமிழகத்தில் தோன்றியவர். எனவேதான், இவரைப் பற்றி மிகத் தெளிவான குறிப்புக்கள் இவர் எழுதிய குருபாரம்பரியத்தில் காணப்படுகின்றன.

சங்கரன் கி.பி. 785க்கும் மேலே பிறந்தான் என்பதே ஞாலகுரு சித்தர் காவிரியாற்றங்கரைக் கருவூருரின் குறிப்பு. அதாவது, பதினெண்சித்தர்கள் இந்து மதத்தின் பெயரால் கன்னியாகுமரி முதல் விந்திய மலை வரையுள்ள நிலப்பகுதி, இளமுறியாக் கண்டத்தின் மூன்றுவது அழிவுக்குப் பின் எஞ்சிய பகுதியாகும். இப்பகுதியோடு இணைந்து ஒரு முழுநிலம் உருவாக கடலுக்குள் இருந்து வெளிப்பட்ட இமயமலையும்; அதன் மடியும், இணைந்தே இந்த இந்துமதத்திற்குரிய இந்தியா உருவாயிற்று. பழைய நிலமும், புதிய நிலமும் இணைந்தே உருவான பெருநிலப் பரப்புக்கு பதினெண்சித்தர்கள் தங்களின் இந்துமதத்துக்குரிய நிலமே இது என்ற பொருளில் 'இந்தியா' என்று பெயரிட்டார்கள். ஏனெனில், கடலுள் மறைந்த இளமுறியாக் கண்டத்தின் தென்கோடி பகுதியிலிருந்த 'பன்மலையடுக்கம்' என்கின்ற மலைத் தொடரில் பனிமுடிய உயர்ந்த பகுதிக்கு 'இமயம்' என்ற பெயரும், அங்கு பிறந்த ஆறுகளுக்கு 'பிறமண்', 'கங்கை', 'யமுனை' ... என்றிருந்த பெயர்களையே புதிதாகத் தோன்றிய இந்தியாவிலிருந்த பனிமுடிய பெரிய மலைக்கு 'இமயமலை' எனவும் அதே ஆறுகளின் பெயர்களையும் சூட்டினுர்கள்.

ஆதிசங்கரர் இளமையிலேயே 'கருவில் திருவுடையாராக' மந்திர சித்திகளைப் பெற்று ஞானசித்தராஞர். இவர் வாழ்ந்த காலம் உலகியலோடு தொடர்பு உடையது 32 ஆண்டு காலம். இறவாயாக்கைக்கும் பிறவாமைச் சத்திக்குமாக பூசையில் அமர்ந்தது நான்கு ஆண்டுகள்; ஆக மொத்தம் 36 ஆண்டுகள். தமிழில் பெரும்புலமை பெற்ற இவர் இந்தியாவில் இந்துமதத்தில் சமசுக்கிருதத்தின் பெயராலும், தமிழின் பெயராலும் பெரிய பிரிவினைகள் இருப்பதை முழுமையாக அகற்றுவதற்காகவே இவர் சமசுக்கிருதத்தில் மிகுந்த புலமை வளர்த்துக் கொண்டார். இவரே தமிழிலிருந்து பெரும்பாலான இந்துமத இலக்கியங்களின் சாரங்களை சமசுக்கிருத மொழியில் உருவாக்கினர். ஆனுல், இவர் எடுத்துக் கொண்ட முயற்சிகள் அனைத்தும் தோற்றுப் போயின. பிருமணர்கள் இவர் சமசுக்கிருத மொழியில் தமிழிலிருந்து மொழி பெயர்த்துக் கொடுத்த இலக்கியங்களை வைத்துக் கொண்டே தமிழைத் தாழ்த்தவும், தமிழினத்தை வீழ்த்தவும் மெய்யான இந்துமதத்தைச் சீரழிக்கவும், பொய்யான ஹிந்துமதத்தை வளர்க்கவும், பிருமணர் தமிழர் என்ற பிரிவினையை அதிகமாக்கவும், இந்துமத சாத்திரச் சம்பிறதாயங்களை சாரமற்றவைகளாக ஆக்கவும், இந்துமத வரலாறுகளைக் குழப்பவும், ... செய்து வருகின்றனர்.

ஆதிசங்கரர் பதினெண்சித்தர் வகுத்த நெறிப்படி ஞானசித்தராகிருர் என்பதும்; இராமலிங்க அடிகளார் போல அருளுலக அநுபவங்களை வேதமாக எழுதினுர் என்பதும், இராமலிங்க அடிகளார் போல் ஆதிசங்கரரும் 'உச்சிக்குடுமி' வைத்திருக்கிருர் என்பதும் (ஆதாரம்: திருவொற்றியூர் வடிவுடையம்மன் கோயிலில் உள்ள ஆதிசங்கரர் சிலையில் காணலாம்) வெள்ளாடை அணிந்திருந்தார்; சிவபத்தராக விளங்கினுர். பெண், பொன், மண் முதலியவைகளை மறுத்து வாழ்ந்தார். இராமலிங்க அடிகளார் மற்ற கோயில்கள், ஆலயங்கள் தமக்குப் பிடிக்காத நிலையில் உள்ளன என்ற போது தமக்கென வழிபாட்டு நிலையங்களை வடலூரில் அமைத்துக் கொண்டார். ஆனுல், ஆதிசங்கரரோ தமது மந்திர சத்தியால் பல கோயில்களின் அருளூற்றுக்களை அடைத்து

விட்டார்; (திருவொற்றியூர், திருவானைக்காவல், ...) அருள் ஆற்றல்களைக் குறைத்து விட்டார். முப்பத்தாறு வயதிலே உடலையும், உயிரையும் நிலைப்பேறு செய்து சமாது ஆகிவிட்ட இளைஞரே ஆதிசங்கரர் என்பதால் இளமைக்கே உரிய வீராவேசத்துடன் 'எடுத்தேன், கவிழ்த்தேன்' என்பது போல் எண்ணற்ற கோயில்களை பாழாக்கி விட்டார். அதாவது பிருமணர்களும், சமசுக்கிருத மொழியும் நுழைய முடியாதிருந்த பல கருவறைகளை அடக்கி ஒடுக்கி சிதைத்துச் சீரழித்துத் தமது மந்திரச் சித்திக்கு வெற்றிச் சின்னங்களாக்கி பிருமணர்களுக்கும், சமசுக்கிருத மொழிக்கும் இனமாகக் கொடுத்தார். எனவேதான், கருணீக்க வேளாளர் மரபில் தோன்றிய [கௌனிய மரபு, கௌனிய கோத்திறம், தமிழ் அந்தணர், சைவ வேளாளர், சிவாச்சாரியார், ... ஒன்றே] சேரநாட்டுச் சிவாச்சாரியக் குலத் திருச்செல்வனான ஆதிசங்கரனைத் தங்களுடைய பிருமண இனத்தவனாக, வட ஆரிய இனத்தவனாக மகிழ்ச்சியாக ஏற்றுக் கொண்டிட்டார்கள். காலப் போக்கில் ஞானசித்தனான ஆதிசங்கரனை பிருமண ஆச்சாரிய பீடமாக்கி பிருமண வேதத்துக்குரிய காவியுடை உடுத்திய மொட்டைத் துறவியாக ஓவியங்களிலும், சிற்பங்களிலும், இலக்கியங்களிலும் சித்தரித்துக் காட்டினர். எனவே, தமிழ் இலக்கியக் கருத்துக்களை சமசுக்கிருத மொழியில் மொழி பெயர்த்ததை 'அனைத்தும் சமசுக்கிருத மொழியில் எழுதியவை, அனைத்தும் சமசுக்கிருத இலக்கியத் தொடர்புடையவை' என்று கூறப்பட்டு விட்டன.

மேலும் இவர்களின் அண்டப் புளுகு, ஆபாசப் பொய், காட்டுமிராண்டித்தனமான கற்பனை என்னவென்றால் சமசுக்கிருத மொழியே தெரியாத வியாசரும், கண்ணதேவரும், வால்மீகிகளும், யக்ஞவல்லிகளும், சிவனும், முருகனும், ... சமசுக்கிருத மொழியில்தான் அனைத்தையும் கூறியுள்ளார்கள் என்று சித்தரித்துக் காட்டியிருப்பதுதான். சமசுக்கிருதம் என்ற குழந்தை பிறந்து 2000 ஆண்டுகள்-தானாகிறது; ஆனால், இது 43,73,040 ஆண்டுகளுக்கு முந்திய இந்து மதத்திற்கும், இந்துமத இலக்கியத்திற்கும் அனைத்து வகையான பூசாவிதிகளுக்கும் ... உரிமை பாராட்டுகிறது. இப்படி, இந்த சமசுக்கிருதம் பழமையோடும், தமிழோடும் உறவாடுவதற்குரிய வாய்ப்பினை உருவாக்கிக் கொடுத்த ஆதிசங்கரனை எண்ணற்ற ஏமாற்றுகளின் மூலம் தங்களுடையவனாக்கிக் கொண்டிட்டார்கள். ஆதிசங்கரனைப் பற்றிய பல உண்மைகளும், இன்றைய காஞ்சி மடத்து வரலாறும் விரைவில் வெளிவரும். இவ்வுண்மைகளை அனைவரும் உணர்ந்து மக்களிடையே எடுத்துக் கூறுவதோடு ஆராய்ந்து பார்க்க வேண்டுகின்றோம்.

---

1984ஆம் ஆண்டு மலரிலிருந்து:

# சங்கரர் வரலாறு

மதுரை கண்டப்பக் கோட்டைச் சித்தர் ஏளனம்பட்டியார் பதினெண்சித்தர் பீடாதிபதிகள் பற்றிய குறிப்புக்களைப் பலவாறாகத் தொகுத்து நிலக்கோட்டைக்கு அருகிலுள்ள கொண்டையம்-பட்டி, கொல்லிமலை, அய்யன்பாளையம், ... போன்ற இடங்களில் குகைகளிலும், நிலவறைகளிலும் பாதுகாத்திட்டார். அவர் எழுதிய குறிப்புகளிலிருந்து ......

"... பலமுறை நான்கு சங்கராச்சாரியாரின் பீடங்களுக்கும் சென்றேன். யாருக்கும் இந்துமதத்தைப் பற்றி முழுமையாகத் தெரியவில்லை. இவர்களுக்குக் குருபாரம்பரியம் குறிக்கும் தென்பாண்டித் தமிழன், ஞானசித்தன்,

உச்சிக்குடுமியான், வெள்ளாடையான், மந்திர சித்தியான் ஆதிசங்கரன் பற்றி ஏதும் தெரியவில்லை. ஆதிசங்கரன் முதலாம் விசயாலயனின் அருளாட்சி முயற்சிக் காலத்தில் வாழ்ந்தவன். தென்னாட்டைக் காவிரியாற்றங்கரைக் கருவூரர் பௌத்தம், சமணம், வட ஆரிய வேதமதம் ... முதலியவைகளிலிருந்து காத்திடுவாரென்பது உணர்ந்து அவரின் அருளில் வடநாடு சென்றவனே ஆதிசங்கரன். இவன் வடநாட்டவர்க்காகவும், வட ஆரியர்களைத் திருத்துவதற்காகவுமே சமசுக்கிருத மொழியில் சித்தர்களின் உண்மையான இந்துமதத் தத்துவத்தை எழுதினான். ஆனால், முதல்யுகச் சிவன், பிறமண், திருமால், முருகன், ... முதலியோர்களையும்; இரண்டாம் யுக இராமனையும் அவனோடு தொடர்புடையார்களையும்; மூன்றாம் யுகக் கண்ணனையும் அவனோடு தொடர்புடையார்களையும், ... நான்காம் யுகம் பிறந்து இரண்டாயிரமாண்டு கழித்தே இத் திருநாட்டுக்கு வந்த பிறமண்ணினரான பிருமணர்கள் தங்களுடைய குலத்தவராக, மொழிக்காரராக, வேத மதத்தவராகப் பொய் கூறி உரிமை பாராட்டிக் கதைகளும் புராண இதிகாசங்களும் புனைந்தது போல் ஆதிசங்கரனையும் தங்களுடைய இனத்தானாக ஆக்கி விட்டார்கள். இந்தப் பிருமணர்களே ஆதிசங்கரனையும், அருணகிரியையும், மௌனகுருவையும், தாயுமானவரையும்... அழித்தனர்.

இந்தப் பிருமணர்களால் வடலூர் அருட்பெருஞ்சோதி அருட்கொடை வள்ளல் பெருமான் அருட்பா வழங்கிய ஞானசித்தன் இராமலிங்கத்தை மட்டும் ஒன்றும் செய்ய முடியவில்லை. இருந்தாலும், இவர்கள் மத வெறிகளையும், சாதிவெறிகளையும், தீண்டாமை வெறிகளையும், ... தூண்டி விட்டு மக்களை என்றென்றும் ஒற்றுமையின்றிச் சண்டையிட்டு மடிபவர்களாக்கித் தாங்கள் மட்டும் அவர்களின் நிலையான தலைவர்களாகவே இருந்து சுரண்டி வாழ வழிசெய்து விட்டார்கள். எனவே, சாதிகளை ஒழிப்பதும், மத ஒற்றுமை உருவாக்குவதும், தீண்டாமைக் கருத்தே இல்லாமல் செய்வதும்; பதினெட்டு வகைக் காடுகளிலும் உள்ள நாற்பத்தெட்டு வகையான உருவ, அருவ, அருவுருவங்களைப் புத்துயிர்ப்புச் செய்வதும்; நாற்பத்தெட்டு வகையான கருவறை மூலவர்களையும், அருளாளர்களையும், மருளாளர்களையும் அநுபவப் பூர்வமான அருளூற்றுக்களாக மாற்றுவதுமே, ... பிறமண்ணினரான பிருமணர்களை அடக்கி யொடுக்கி உரிய நிலைக்குக் கொண்டு செல்லும். இல்லையேல், பீடாதிபதிகளின் பூசைகளில் அவிர்ப்பலியாகி அனைத்துத் தமிழின துரோகிகளும், விரோதிகளும் கூண்டோடும் பூண்டோடும் ஒழிய நேரிடும். அதுவே, தவிர்க்க முடியாத நிலை, ...”

பிருமணர்கள் ஆதிசங்கரனின் பின்னால் மறைந்து கொண்டு செயல்படுகிறார்கள். ஆதிசங்கரனே தமிழன் என்பதையும், ஆதிசங்கரனின் நூல்கள் பதினெண்சித்தர்களின் இலக்கியங்களின் சாரமே என்பதையும்; அமராவதி ஆற்றங்கரைக் கருவூரர் குறிப்பிடும் சேரன் மலைப்பகவதி, மூகாம்பிகை, காளி, திரிசூலி, ஈசுவரி, வனக்கிளி, வனராணி, வனதேவி, மலைமகள், மோகினி, தண்டினி, மாயை, ... முதலிய அனைத்துச் சத்திகளையும் அரிய தெய்வத் தமிழால் பூசை செய்துதான் சித்தி பெற்றான் என்பதையும்; ஆதிசங்கரனை பிருமணர்களே அழித்தார்கள் என்பதையும்; சங்க இலக்கியங்களும், திருமூலரின் படைப்புக்களும், திருவள்ளுவரின் படைப்புக்களும், திருவாசகமும், தேவாரமுமே ஆதிசங்கரனை அருளாளனாக்கின என்பதையும்;

காவிரியாற்றங்கரைக் கருவூரூரின் வாழ்த்தைப் பெற்று வடநாட்டில் இந்துமதம் வளர்க்கச் சென்றவனே ஆதிசங்கரன் என்பதையும் ... ... வெளிப்படையாக விளக்கித்தான் பிருமணர்கள் ஆதிசங்கரனைக் கேடயமாகவும், அரணாகவும் பயன்படுத்துவதைத் தடுக்க முடியும். அப்பொழுதுதான், பிருமணர்களின் வேதமதக் குழப்பங்களையும், ஆரிய மாயைகளையும் அகற்றி உண்மையான இந்துமதம் என்கின்ற சித்தர் நெறியை மறுமலர்ச்சி பெறச் செய்ய முடியும். அப்பொழுதுதான், வட ஆரியரின் பிடியிலிருந்து இத்திருநாட்டு மக்களைக் காப்பாற்ற முடியும்.

***சித்தர் நெறிப்படி வாழும் தமிழினத்தாரின் மதத் தலைவர்கள், ஆச்சாரியார்கள், குருக்கள், பூசாறி ... என்போர்;***

**காவி உடையைப் பயன்படுத்துவதில்லை; பெரும்பாலும் சிவப்பு வண்ண ஆடை அல்லது வெள்ளை ஆடையையே பயன்படுத்துவர்.**

**மொட்டையடிப்பது கிடையாது; தாடி முடியுடையவராய் நீள்முடியை உச்சியில் சேர்த்து உச்சிக்குடுமியாக கட்டிச் செயல்படுவதே மரபு.**

**கி.பி.10ஆம் நூற்றாண்டிற்குப் பின்னர் தமிழகத்தில் பிருமணரின் ஆதிக்கம் அதிகரித்த போது இந்தப் பிருமணர்களால் புதிதாக உருவாக்கி பரப்பப்பட்ட பழக்கமே மொட்டையடித்து காவியுடை அணிந்து மதப்பணிகளில் ஈடுபடுவது என்பது.**



**குவலய குருபீடம்,**
**12வது பதினெண்சித்தர் பீடாதிபதி**
**ஞாலகுரு சித்தர் அரசயோகி கருவூரூர்**

# தமிழினத் தாழ்ச்சி நிலை தொடர்ச்சி நிலையாவது ஏன்? என்ற புத்தகத்திலிருந்து ஆதிசங்கராச்சாரியார் பற்றிய செய்திகள்

**மதம், மொழி இரண்டு பற்றிய மெய்யான செய்திகள்தான் தமிழரின் தாழ்ச்சி, வீழ்ச்சி அகற்றும்:-**

நமக்கு யார் மீதும் மறுப்போ, வெறுப்போ, எதிர்ப்போ, பகையோ இல்லை! இல்லை!! இல்லை!!! இல்லவேயில்லை. நாம் கூற முற்படுவதெல்லாம் இம்மண்ணுலகின் மூலமதமும் முதல் மதமுமான இந்து மதத்தின் வரலாறும், தத்துவமும், சித்தாந்தமும், சாத்திறத் தோத்திறங்களும், அருட்கலைகளும், அருளுலக அறிவியல்களும், அருளுலகச் சான்றோர்களும், ஆன்றோர்களும்.... பற்றிய முழுமையான செய்திகளும் முறையாகக் காலக் கணக்கீட்டு அடிப்படையில் வெளியிடப் பட்டேயாக வேண்டும் என்பதுதான். ஏனென்றால் அதன் அடிப்படையில்தான், 'தமிழர்களுக்குத் தங்களின் முன்னோர்களெல்லாம் முட்டாள்களல்ல' என்ற பேருண்மை விளங்கிடும்.

மேலும், 'தங்களுடைய தாய்மொழியான தமிழ்மொழிதான் அண்டபேரண்டமாளும் பதினெண் சித்தர்களின் சித்தர் நெறியெனும் இந்துமதத்தின் மெய்யான ஆட்சிமொழி' என்ற பேருண்மையும் விளங்கிடும். இப்படித் தமிழர்களுக்குத் தங்களின் மதமான இந்துமதம்தான் இம்மண்ணுலகின் முதல்மதம், மூலமதம் என்ற பேருண்மையும், தங்களுடைய தாய்மொழியான தமிழ்மொழிதான் இம்மண்ணுலகின் முதல்மொழி, மூலமொழி, அருள்மொழி, அண்டபேரண்ட அருளுலக ஆட்சிமொழி என்ற பேருண்மையும் தெளிவாக விளங்கினால்தான், தன்னம்பிக்கையும், தன்மானப் பிடிப்பும், இன உணர்வும், இனப்பற்றும், இன

ஒற்றுமையும், மொழிப்பற்றும், மொழி உணர்வும், மொழி உரிமை உணர்வும், மொழி விடுதலை உணர்வும், இன விடுதலை உணர்வும்... முளைத்துக் கிளைத்துச் செழித்து வளர்ந்திடும். அப்பொழுதுதான், அவர்கள் எந்த அன்னியரையும், அன்னிய மொழியையும் உயர்ந்ததாகவோ, சிறந்ததாகவோ, பயன்மிக்கதாகவோ, அரியதாகவோ, பெரியதாகவோ நினைக்க மாட்டார்கள்! நினைக்க மாட்டார்கள்! நினைக்கவே மாட்டார்கள்! இப்படிப்பட்ட நினைப்பைத் தமிழர்களுக்கு உருவாக்குவதன் மூலம்தான் அவர்களின் தாழ்ச்சி நிலை தொடர்ச்சி நிலையாக இருந்து வருவதை மாற்ற முடியும்! மாற்ற முடியும்! மாற்ற முடியும்!

தமிழர்கள் தங்களுடைய சமயம்தான் இந்துமதம் என்பதை மறந்தும், துறந்துமே செயல்படுகிறார்கள். அவர்கள் வட ஆரியர்களின் தோற்றத்தையும், பூசை-முறைகளையும், சமசுக்கிருதப் பூசாமொழிகளையும், சாத்திரச் சம்பிறதாயச் சடங்குகளையுமே மெய்யான இந்து மதத்திற்குரியன என்று தவறாக எண்ணி மயங்குகிறார்கள். இந்த மயக்கத்தால்-தான் வடஆரியச் சூழ்ச்சிகளுக்கு இரையாகித் தாழ்ச்சியுற்றே கிடந்து வருகிறார்கள்.

### காலடி ஆதிசங்கராச்சாரியார் ஒரு தமிழரே!

இதற்கு இன்னொரு காரணமும் உண்டு. கி.பி. 785க்குப் பிறகு தோன்றிய கருணீக்கச் சைவ வேளாள குலத்தில் தோன்றிய காலடி ஆதிசங்கராச்சாரியார் தமிழராகப் பிறந்திருந்தும், ஒரு வட ஆரியராக விளம்பரப் படுத்தப்பட்டார். அவர் சித்தர் நெறிப்படி வெள்ளாடை மேனியராகவும், உச்சிக் குடுமியாராகவும் வாழ்ந்திட்ட போதும் அவரை வட ஆரிய நெறிக்குட்பட்ட காவி உடை மேனியராகவும், மொட்டைத் தலையராகவும் சித்தரித்து விட்டார்கள். இதனால் தமிழினத்தில் தோன்றிய மாபெரும் ஆச்சாரியார்களில் ஒருவர் வட ஆரியரால் தங்களுக்குரியவராகத் தத்தெடுக்கப் பட்டுவிட்டார். இதனால் தமிழினத்திற்கும் மதத்திற்கும் மொழிக்கும் பண்பாட்டிற்கும்..... மிகப் பெரிய நலிவையும், மெலிவையும், நோய்நிலையையும், தேய்-நிலையையுமே விளைவித்துக் கொடுத்திட்டார்கள் வட ஆரியர்கள்.

### காலடி ஆதிசங்கராச்சாரியாரைச் செயல்படச் செய்தவர் 11வது பதினெண்சித்தர் பீடாதிபதியே:-

ஏனெனில் கருவூர்த் தேவர் தமது குருபாரம்பரிய வாசகத்தில் மிகத் தெளிவாக “.... முப்பத்திரண்டாவது பீடமாகத் தோன்றிய காலடி ஆதிசங்கராச்சாரியாரோடு கலியுகத்திற்கு ஐந்து சமயாச்சாரியார்கள் கிடைத்திட்டார்கள். இதில் மாணிக்க வாசகர், திருநாவுக்கரசர், திருஞானசம்பந்தர், சுந்தரர் எனும் நால்வரும் இந்துமதத்தின் மூலமொழியான தமிழ் மொழியிலேயே அனைத்து வகையான தத்துவ தத்துவாந்த, சித்த சித்தாந்த, நாத நாதாந்த, போத போதாந்த, ஓத ஓதாந்த, மறை மறையாந்த, முறை முறையாந்த, நெறி நெறியாந்தக் கருத்துக்களை யெல்லாம் அருளுலக அநுபவங்களோடு விளக்கினார்கள். இந்த நான்கு சமயாச்சாரியார்களின் கருத்துக்களின் சாரத்தை, சாத்திறத் தோத்திறங்களாக இம் மண்ணின் அன்னியர்களான வட ஆரியர்களுக்கு விளக்கி யுரைத்தவரே காலடி ஆதிசங்கராச்சாரியார். ஏனெனில், பிற மண்ணினரான பிருமணர் எனும் வட ஆரியர்கள் இந்தியத் துணைக் கண்டம் முழுவதும் பெரிய பெரிய நகரம் முதல் குக்கிராமம் வரை பரவியிருந்தனர். இந்தப் பிருமணர் மூலம்தான் எளிதாக இந்துமதக் கருத்துக்களைப் பரப்பி இந்துமத

மறுமலர்ச்சிப் பணிகளை நிறைவேற்ற முடியும் என்று காலடி ஆதிசங்கராச்சாரியாரை சமசுக்கிருத மொழி வழியாகச் செயல்படச் செய்தார் பதினோராவது பதினென் சித்தர் பீடாதிபதி குருமகாசன்னிதானம் ஞாலகுரு சித்தர் காவிரியாற்றங்கரைக் கருவூரார்.

இவர் பத்தாவது பதினெண் சித்தர் பீடாதிபதி, குருமகா சன்னிதானம், சித்தர் அமராவதியாற்றங்கரைக் கருவூரார் அவர்கள் தேவகுமாரனாகத் தோன்றிய இசுரவேல் நாட்டில் தோன்றிய ஈசாவைப் [ஈசுவரனை -> ஈசாவை] பதினெட்டாண்டுகள் அருளுலகப் பயிற்சி-களிலும், முயற்சிகளிலும் தயாரித்தது போல்; தம் காலத்தில் தோன்றிய முப்பத்திரெண்டாவது பீடமான ஆதிசங்கராச்சாரியாரை அருளுலக மறுமலர்ச்சிக்காகத் தயாரித்தார். இந்த இருவருமே [ஈசாவும், ஆதிசங்கராச்சாரியாரும்] முப்பத்துமூன்று ஆண்டுகளே வாழ்ந்த போதிலும் அருளுலக நிலையான பெருஞ்-சுடர்களாக விளங்கி வருகிறார்கள். இருந்த போதிலும், இந்த இரண்டு பேர்களுமே பதினெண் சித்தர் பீடாதிபதிகளால் உருவாக்கப் பட்டவர்கள் என்ற மாபெரும் உண்மை மறைக்கப் பட்டும், மறக்கப் பட்டும் விட்டதால் சித்தர் நெறியெனும் இந்துமதம் தமிழர்களுக்கு விருந்தாகவோ அல்லது மருந்தாகவோ பயன்பட முடியாத இரண்டும் கெட்டான் நிலை உருவாகி விட்டது, உருவாகி விட்டது, உருவாகி விட்டது. இதுவே, தமிழினத் தாழ்ச்சி நிலை தொடர்ச்சி நிலையாவதற்குக் கருவாகவும் அமைந்து விட்டது.

ஈசாவின் வாசகங்களிலும், காலடி ஆதிசங்கராச்சாரியாரின் வாசகங்களிலும் பதினெண் சித்தர்களின் தெய்வத் தீந்தமிழ்ச் சொற்களும், எழுத்தொலிகளும், கருத்தின் பிரதிபலிப்புக்களும், செயல்திட்டங்களின் எதிரொலிகளும்... மிகுதியாக இருப்பதை என்றைக்குத் தமிழர்கள் கண்டுபிடிக்கின்றார்களோ அன்றைக்குத்தான் தமிழினத் தாழ்ச்சி நிலை தொடர்ச்சி நிலையாக இருப்பது தடுக்கப்பட்டிடும்; அகற்றப் பட்டிடும்" என்று குறிக்கிறார். இப்படிக் கருவூர்த் தேவர் தனது குருபாரம்பரிய வாசகங்கள் மூலம் தனது தந்தையான தஞ்சைப் பெரிய கோயிலைக் கட்டிய பதினோராவது பதினெண் சித்தர் பீடாதிபதி, குருமகா சன்னிதானம், ஞாலகுரு சித்தர் காவிரியாற்றங்-கரைக் கருவூராரின் கனவுகளை நனவாக்குகிறார்.

### 32வது ஆதிசங்கராச்சாரியார் திருஞான சம்பந்தரின் மறு அவதாரமே:-

காவிரியாற்றங்கரைக் கருவூராரின் திருமகன் கருவூர்த் தேவர் அவர்கள் தம்முடைய குருவாக்கு, குருவாக்கியம், குருவாசகம் என்பனவற்றின் மூலம் தெரிவிக்கின்ற வருத்தம் தோய்ந்த கருத்துக்கள் தமிழர்களின் தாழ்ச்சி நிலை என்றென்றும் தொடர்ச்சி நிலையாகவே இருக்கும் என்ற பேருண்மையையே விளக்குகின்றன. இவர் தமது குருவாக்கில், 'தமது தந்தை காவிரியாற்றங்கரைக் கருவூரார் அவர்கள் தாம் வளர்த்த விசயாலயனுக்கு முடிசூட்டிய பின் (கி.பி.785) வெளிநாட்டுச் சுற்றுப் பயணம் செய்து ஆறு ஆண்டுகளுக்கு மேலாகித் தமிழகம் திரும்பிய போது சேரநாட்டில் **32வது ஆதிசங்கராச்சாரியார்** கருணீக்க சைவ வேளாளர் மரபில் தோன்றியிருப்பதை வானில் தோன்றிய புதிய விண்மீன் மூலம் அறிந்து நேரில் சென்று கண்டார். அவர் சீர்காழிச் சிவபாத இருதயர் மகனாகப் பிறந்த **திருஞான சம்பந்தரின் மறு அவதாரமே** என்று உணர்ந்தார். மேலும், அதே கருணீக்க சைவ வேளாளர் குலத்தில் இப்பொழுது தோன்றியிருப்பதால், இந்த முறையாவது மனிதனுக்குரிய நிறைந்த வயதான நூற்றியிருபது ஆண்டுகள் வாழ்ந்து அருளுலக இருளகற்றும் பணியைச் செய்ய வேண்டும்

அவர் என்று விரும்பினார். எனவே, சேர நாட்டுக் காலடியில் சில காலம் தங்கியிருந்து பலமுறை பாலகனாக இருந்த ஆதி-சங்கராச்சாரியாரைச் சந்தித்து அவருடைய பழம்பிறப்பை உணர்த்தினார்.



ஆதிசங்கராச்சாரியார், திருத்தோன்றலாகக் குமரக் கடவுள் தோன்றியது போல் தேவகுமாரப் பதிலியாகத் தோன்றியிருந்த காரணத்தால் அவருடைய திருப்பணி பற்றி காவிரியாற்றங்கரைக் கருவூரர் அவரையே கேட்டறிந்தார். அவர் திருஞான சம்பந்தராக இருந்து பதினாறு ஆண்டுக் காலம் தமிழால் மெய்யான இந்து மதத்தை வளர்த்த பணி நிறைவுறாமல் போனதால்; இந்து மதத்துக்குரிய இந்தியா முழுவதும் மதத் துறையில் இருள் பரப்பி இடர் செய்பவர்களைத் திருத்துவதற்காக மேலும் பதினாறு ஆண்டுகள் வாழ்ந்து பணியாற்றப் போவதாகத் தெரிவித்தார். அதாவது, 32 ஆண்டுகளுக்கு மேல் தன்னால் இம் மண்ணுலகில் வாழ இயலாது என்று உறுதியாகத் தெரிவித்தார். அது கேட்ட காவிரியாற்றங்கரைக் கருவூரர் 'இந்தத் தேவகுமாரப் பதிலியைப் போலத்தான் அமராவதியாற்றங்கரைக் கருவூரர் வளர்த்த தேவகுமாரன் ஈசா, அவர் எவ்வளவோ கூறியும் 128 ஆண்டுகள் உயிர் வாழாமல் தன்னுடைய 32 வயதிற்குள் பணிகளை முடித்து நிறைந்தார்.

இப்பொழுது, தான் உருவாக்க நினைக்கும் இந்தத் தேவகுமாரப் பதிலியான 32வது ஆதிசங்கராச்சாரியார், தேவகுமாரன் ஆதிசிவன் மகன் முருகன் போலும், இசுரவேல் நாட்டு தேவகுமாரன் ஈசா போலும் 32 ஆண்டுகளே உலகியலில் உலா வரப் போவதாகக் கூறுகிறான். இதனால் தேவர்களின் வருகையாலோ தேவகுமாரர்களின் வருகையாலோ அருளுலக இருளகற்றும் பணிகள் முழுமையடையாமல் போகின்றன' என்று மிகவும் வருந்தியதாகக் குறிப்பிடுகிறார்.

**ஆதிசங்கராச்சாரியாரின் சமசுக்கிருதப் பணி:-**

இதேபோல் குருவாசகத்தில் 'சித்தர்களின் மெய்யான இந்துமதம் தழைக்கத் தோன்றிய திருஞானசம்பந்தர் 16 ஆண்டுகளுக்குள் ஆற்றிய அரும்பெரும் பணிகளை அவருடைய மறு அவதாரமாகத் தோன்றிய 32வது ஆதிசங்கரர், 32 ஆண்டுகள் வாழ்ந்தும், தமிழிலிருந்து பிருமணர்களுக்காகத் தோற்றுவிக்கப் பட்ட சமசுக்கிருத மொழியில் 32 ஆண்டுகள் செயல்பட்டும் முழுமையாகச் செய்ய முடியவில்லை. அதாவது, திருஞானசம்பந்தர் தமிழில் பல்லாயிரக் கணக்கான தேவாரப் பாடல்களைப் பாடித் தோத்தர, தோத்திர, தோத்திறக் கடலாகவும், சாத்திர சாத்திற சாத்தர மலையாகவும் நிலையான பணியினை ஆற்றினார். இந்தத் திருஞான சம்பந்தரைப் போல் அவருடைய அவதாரமான ஆதிசங்கராச்சாரியார், சமசுக்கிருத் மொழியில் முழுமையாக தோத்திர, தோத்திற, தோத்தரங்களையோ, சாத்திர, சாத்திற, சாத்தரங்களையோ உருவாக்க வில்லை.

இது பற்றிக் காவிரியாற்றங்கரைக் கருவூரர் அவர்கள் நேரில் பலமுறையும், கரூர் சந்தானத்தின் மூலமும் (சங்கராச்சாரியார் கூடவே வாழ்ந்த நான்கு அடியார்களுள் ஒருவர், தமிழர்) ஆதிசங்கராச்சாரியாருக்கு விளக்கமாக எடுத்துக் கூறித் தமிழில் உள்ள சாத்திர தோத்திறங்களைக் கூடுமான அளவு மிகுதியாகச் சமசுக்கிருத மொழியில் மொழி பெயர்க்குமாறு பரிந்துரைத்தார். ஆனால், அவரோ! பிறமண்ணினரான பிருமணர்களுக்கு

சித்தர் நெறியான மெய்யான இந்துமதத்தின் தத்துவங்களை விடச் செயல் சித்தாந்தங்களில் அடிப்படையாக இருப்பனவற்றை மட்டும் தெரிவித்தால் போதும் என்றே பதிலளித்தார்.

இதை, ஆதிசங்கராச்சாரியாரின் வாக்காகவே காவிரியாற்றங்கரைக் கருவூரரின் குருபாரம்பரியத்தில் "…. தேவகுமாரனின் பதிலியாகத் தோன்றிய சீர்காழித் திருஞானசம்பந்தரின் மறு அவதாரமாகிய 32வது ஆதிசங்கராச்சாரியார் பீடமாகத் தோன்றிய காலடி ஆதிசங்கரன் ஆரிய மன்னன் பிரகதத்தனுக்கு சங்கப் புலவர் கபிலர் குறிஞ்சிப் பாட்டு ஒன்றே ஒன்று பாடி இந்துமதத்தின் இல்லற நெறியை விளக்கி யுரைத்தது போல்; தான் விரும்பிய தோத்திறங்களையும், போற்றி அகவல்களையும், அருட்சினைச் சாத்திறங்களையும் சமசுக்கிருத மொழியில் மொழிபெயர்த்துக் காட்டினால் போதும்; அவற்றின் மூலம் பிருமணர்கள் சித்தர்களின் இந்துமதத்தை நன்கு புரிந்து செயல்பட்டு அருளை அநுபவப் பொருளாகப் பெற்று உய்வடைவார்கள்…." என்று கூறியதாக மிகத் தெளிவாகக் குறிக்கப் படுகிறது.

இதனால், 32வது ஆதிசங்கராச்சாரியார் பீடமாகத் தோன்றிய காலடி ஆதி-சங்கராச்சாரியார் தமிழிலிருந்த அனைத்து வகையான சித்தர்களின் இலக்கியங்களையும், எழுதாக் கிளவிகளையும் கற்றுத் தெரிந்தே (தேர்ந்தே) தனது சமசுக்கிருதச் சாத்திற, தோத்திறங்களையும், போற்றி வாசகங்களையும் உருவாக்கிட்டார் என்பது தெளிவாகின்றது.

### காலடி ஆதிசங்கராச்சாரியார் தயாரான விதம்:-

கருவூர்த் தேவரின் குருபாரம்பரியத்தில், "…. எந்தை, தஞ்சைப் பெரிய கோயிலைக் கட்டிய குருமகா சன்னிதானம் ஞாலகுரு சித்தர் காவிரியாற்றங்கரைக் கருவூரர் அவர்கள் மிகத் தெளிவாகவும், நேரடியாகவும் வானத்தில் ஒளிர்ந்த திருத்தோன்றல் பிறப்புக்குரிய விண்மீன் மூலம் ஆச்சாரியார் ஒருவர் பிறப்பெடுத்-திருக்கிறார் என்பதைக் கண்டறிந்து தேடிச் சென்று, சேரநாட்டின் ஆலவாய்ப் புழை (இது ஆல்வாய்ப்புழை என்றும், பூர்ணு என்றும், சூர்ணு என்றும் பல பெயரால் குறிக்கப் படுவது மரபாய் இருக்கிறது) ஆற்றங்கரையில் ஆறு வயதுப் பாலகனான சங்கரனைக் கண்டுபிடித்தார்; அவனிடம், அவனே முப்பத்திரண்டாவது ஆதிசங்கராச்சாரியாராக அருட்பிறப்பெடுத்திருக்கிறான் என்பதை அறிவித்தார். அவனுக்கு முறைப்படி அமாவாசை நாளிலும், மூன்றாம் பிறை நாளிலும், முழுநிலவு நாளிலும் அருள் வழங்கி அனைத்து வகையான அத்திற, சாத்திற, சூத்திற, தோத்திற, நேத்திற, வேத்திறங்களிலும்; நேம, நியம, நிடத, நிட்டை, நீதிகளிலும்; சுருதி, ஆரண, ஆகம, மீமாம்சைகளிலும் அறிவு பெறுமாறு செய்தார்.

இந்தப் பயிற்சி இரண்டாண்டு காலத்துக்கு மேலே நேரடியாகவும், சித்தரடியான் சித்தரடியாள் சித்தரடியார் மூலமும் ஆலவாய்ப் புழை ஆற்றங்கரைக் காலடி சங்கரனுக்கு வழங்கப் பட்டது. அதன்பிறகு அவனுடைய அருட்பிறப்புக்கு ஏற்ப அவனுடைய பெயரை ஆதிசங்கரன், ஆதிசங்கராச்சாரியார் என்று திருத்தம் செய்தார். இந்த ஆதிசங்கரன் தாய்ப் பாசத்திலிருந்தும், உலகியல் பந்த பாசங்களிலிருந்தும் விடுபடுவதற்காகத்தான்; முற்பிறவியில் சீர்காழித் திருஞானசம்பந்தராக அருட்பிறப்பெடுத்துப் பாடிய தேவாரங்களைப் பயிற்சி செய்ய ஆரம்பித்தார்.

அப்படி அவர் உளமுருகித் தேனூறும் தேவாரப் பாடல்களைப் பாடிய காலத்தில் 'சிவபெருமான் நேரில் தோன்றி, நந்திதேவனை

முதலையாக அனுப்பித் தான் செய்யப் போகும் திருவிளையாடல் மூலம் ஆதிசங்கரன் உச்சிக்குடுமியனுக, வெள்ளாடை மேனியனுக, தாந்தரீகச் சித்தியாளனுக, மாந்தரீகவல்லியாக எல்லா வல்லமைகளை மேலும் பெற்று ஞானசித்தராக, 32வது ஆதிசங்கராச்சாரியாராக விளங்கிட அருளினுர். மேலும், அவனது விருப்பம் போல் முற்பிறவியில் திருஞானசம்பந்தராக 16 ஆண்டுக்காலம் வாழ்ந்த அருள்வாழ்வு போல்; இருமடங்கு வாழ்வினைப் (16+16=32) பெறுவான் என்றும் வாழ்த்தினுர்.

அதற்குப் பின் சிவபெருமானிடம் அவன் தான் ஆற்ற வேண்டிய பணிபற்றி வினுவெழுப்பிய போது, 'பதினெண் சித்தர்களின் இந்துமதத்தில் இருளும், அறியாமையும், மடமையும், பயனில்லாச் சடங்குகளும் சமசுக்கிருத மொழியில் விளைந்து விட்ட காரணத்தினுல், சித்தர்களும் நாயன்மார்களும் ஆழ்வார்களும் பல்வேறு வகைப்பட்ட சித்தியாளர்களும் தமிழ்மொழியில் வழங்கி யுள்ள இந்துமதத்தின் சாரத்தைச் சமசுக்கிருத மொழியில் அருளிச் செயல்படுமாறு ஆணையிட்டார் சிவபெருமான்". அதற்கு ஆதிசங்கராச்சாரியார் 'தன்னை இறைவன் குறித்த காலத்தில் ஆட்கொள்ள வேண்டும்' என்று வேண்டினுர். இறைவனும் 32 ஆண்டுகளில் திருக்கைலாயம் வந்து சேருமாறு ஆணையிட்டார்'.

### இமயமலைச் சாரல் இருடிகளும் காலடி ஆதிசங்கராச்சாரியாரும்:-

இம் மாபெரும் சித்திச் செய்திகளைப் பதினுேராவது பதினெண் சித்தர் பீடாதிபதி குருமகாசன்னிதானம் ஞாலகுரு சித்தர் காவிரியாற்றங்கரைக் கருவூரர் உணர்ந்து, ஏழு இருடிகளை இமயமலைச் சாரலிலிருந்து வரவழைத்து ஆதிசங்கராச்சாரியாருக்குத் தேவையான அருளுலகப் பயிற்சிகளை வழங்குமாறு அனுப்பி வைத்தார். இந்த ஏழு பேர்களும் ஆதிசங்கராச்சாரியாருக்கு அருவமாகவும், உருவமாகவும், அருவுருவ-மாகவும் இருந்து ஆரம்பம் முதல் இறுதி வரை குருமார்களாக விளங்கினுர்கள். இவர்களே ஆதிசங்கராச்சாரியாருக்குச் சமசுக்கிருதத்தில் நிகரற்ற புலமையையும், தமிழில் உள்ள இந்துமத இலக்கியங்களில் அளப்பரிய ஆற்றலையும் உருவாக்கிக் கொடுத்தார்கள். இவற்றிற்கெல்லாம் மேலாக, அவ்வப்பொழுது இவர்களே அருவுருவாய் தோன்றி ஆதிசங்கராச்சாரியார் செல்ல வேண்டிய இடங்களையும், செய்ய வேண்டிய பணிகளையும் பற்றி விளக்கியுரைத்தார்கள். இறுதியில், ஆதிசங்கராச்சாரியார் திருக்கைலாயத்திற்குச் செல்லும் போது, இவர்கள்தான் அவரோடு துணையாகச் சென்றுர்கள்.

இந்த ஏழு (7) பேர்களும் ஆதி-சங்கராச்சாரியாரை அறுபது (60) ஆண்டுகாலம் நிறை வாழ்வு வாழக் கேட்டுக் கொண்ட போது கூட; 'தான் அடுத்தடுத்து வரும் பிறப்புக்களில் ஒவ்வொரு பிறப்பிலும் 16 ஆண்டுக்கால வாழ்வை அதிகரித்துச் செயல்படப் போவதாக வழக்கம் போலத் தன் விருப்பப்படி அறிவித்தார். அதாவது, அடுத்துத் தோன்றக் கூடிய ஆதி-சங்கராச்சாரியார்கள் 48, 64, 80, 96, 112, 128, 144.... என்று வாழ்ந்து அருட்பணியாற்றப் போவதாகக் கூறினுர். அதாவது, 48 பதினெண் சித்தர் பீடாதிபதிகளும் ஒருவர் பின் ஒருவராகத் தோன்றித்தான் வெவ்வேறு கால அளவு வாழ்ந்து அருட்பணியாற்றுகிறுர்கள் என்பது போல்; ஆதிசங்கராச்சாரியார்களும், சங்கராச்சாரியார்களும் இந்த யுக முடிவு வரை தேவையான காலக்கட்டங்களில் தோன்றிச் செயல்படுவதுதான் அருளுலகிற்கு நலம்

பயக்கும் என்று கூறினர். இந்த வாதத்தை முழுமையாக ஏற்றுக் கொள்ளாததால்தான், பதினோராவது பதினெண் சித்தர் பீடாதிபதி அதிகமாக நேரடியாக ஆதிசங்கராச்சாரியாரின் வாழ்வில் ஈடுபடவில்லை.

**காலடி ஆதிசங்கராச்சாரியாரின் சிறப்பு மாணக்கர் கரூர் சந்தானம் பற்றி:-**

இவரைப் போலவே, இவரால் ஆதிசங்கராச்சாரியாருக்கு ஆசிரியர்களாகவும், வழிகாட்டிகளாகவும், துணைவர்களாகவும் நியமிக்கப்பட்ட ஏழு இருடிகளும் ஆதிசங்கராச்சாரியாரின் விருப்ப வாழ்வில் அதிகம் குறுக்கிடாமலும், எந்தவிதமான திருத்த அறிவுரைகளைக் கூறாமலும் ஒதுங்கி விலகியே செயல்பட்டிட்டார்கள். அதாவது, பத்தாவது பதினெண் சித்தர் பீடாதிபதியின் குருவாணைப் படி இசுரவேல் நாட்டு ஈசா செயல்படாமல் வாழ்ந்ததால் துன்புற்றது போல் இந்தத் தேவகுமாரப் பதிலி ஆதிசங்கராச்சாரியாரும் பதினோராவது பதினெண் சித்தர் பீடாதிபதியின் குருவாணைப் படி செயல்படாததால் துன்புற நேரிட்டது.

அதே சமயத்தில் ஆதிசங்கராச்சாரியாரின் செயல்கள் சிறக்க வேண்டுமென்பதற்காக அமராவதியாற்றங்கரைக் கருவூரிலிருந்து சித்தர் காகபுசுண்டர் பாரம்பரியத்திற்குரிய சந்தானத்தை (இவரை ஆதிசங்கராச்சாரியார் சந்தானா என்றும், சநந்தனா என்றும் செல்லமாக அழைத்துத் தன்னுடைய சிறப்பு மாணக்கனாக வைத்துக் கொண்டார்.) வடநாடு சென்று காசியிலிருந்த சங்கராச்சாரியாரைச் சந்தித்து அவருக்குத் துணையாக இருக்குமாறு அனுப்பினார். இந்தச் சந்தானம் ஆதிசங்கராச்சாரியாருக்குப் பாதுகாப்பாக அனுப்பப் பட்டதால் காத்தற் கடவுளான மாயோனையும் (திருமால், பெருமால், நெடியோன்), அவனுடைய சிறப்பான பேராற்றல் மிக்க அருள் வடிவான நரசிம்ம வடிவத்தையும், அவனுடைய இராமாவதாரப் பாதுகாவலனான ஆஞ்சநேயரையும், 36 திருக்கரம் கொண்டருளூ ஆத்தாள் தேவி கொற்றவையையும் சித்திப் பூசையில் வழிபடுமாறு ஆணையிடப் பட்டார். இதன்படியே, இவர், இறுதிவரை



ஆதிசங்கராச்சாரியாருக்கு அருளுலக பொருளுலகப் பாதுகாப்பாக விளங்கினார்.

ஆனால், இவர் எவ்வளவோ முயன்று எடுத்துக் கூறியும் கூட ஆதிசங்கராச்சாரியார் 32 ஆண்டுகளுக்கு மேல் வாழ மறுத்து 32 ஆண்டுகள் நிறைவுற்றதும் திருக்கயிலாயம் சென்று விட்டார். அப்படித் திருக்கயிலாயம் சென்ற ஆதிசங்கராச்சாரியாரின் முழுமையான வாழ்க்கையினைப் பற்றியும், அவருடைய எளிய போதனை விளக்கங்கள் பற்றியும், சாதனைகள் பற்றியும் நெடுங்காலம் விளக்கியுரைத்தார் இந்தச் சந்தானம். இப்படி இவர் ஆதி-சங்கராச்சாரியாரோடு வாழ்ந்த பெரியவராகத் திகழ்ந்தும் கூட, இவருடைய காலத்திலேயே பிறமண்ணினரான பிருமணர் எனும் வட ஆரியர்கள் சூழ்ச்சியாக தமிழரான ஆதிசங்கராச்சாரியாரைத் தங்களுடைய குருவாக, ஆச்சாரிய பீடமாக, வேதமதத் தலைவராக அறிவித்துப் போற்றித் தங்களுடையவராக ஆக்கிக் கொண்டார்கள்.

அப்பாவித் தமிழர்களும் இதனை நம்பி ஏமாந்தார்கள்.

**இந்துமதத்தின் மூல ஆச்சாரியார்கள் எண்மர்:-**

கருவூர்த் தேவரின் குருபாரம்பரியத்தில் காலடி ஆதிசங்கராச்சாரியார் பற்றிய மிகப் பெரிய அரிய குறிப்பொன்று இருக்கின்றது. இக் குறிப்புக்கள் ஆதிசங்கராச்சாரியாரையும், சங்கராச்சாரியாரையும் பற்றிப் பல ஆராய்ச்சிகள் செய்யுமாறு கண்டப்பக் கோட்டைச் சித்தர் ஏளனம்பட்டியாரைத் தூண்டியிருக்கிறது. இதுபற்றி அவரும், அவருடைய தந்தை உருத்திரம்பிள்ளையும், முன்னோர் சித்தர் கைகொட்டி நாதரும், காளாங்கி நாதரும், தொண்டர் சீர்பரவும் பண்டாரமும், விக்கிரமாதித்தக் குருக்களும், காகபுசுண்டர் வழிவந்த சித்தர் நாகப்பத் தீட்சதரும், அருங்குள இலிங்கம் கொண்ட தேசிகரும் ..... பல ஆய்வுக் கட்டுரைகள் எழுதியிருக்கிறார்கள். சிலர் தனி நூல்களும் எழுதியிருக்கிறார்கள். இவற்றின் அடிப்படையில்-தான் இ.ம.இ.யின் இரண்டாவது தலைவர் எட்டுவகை ஆச்சாரியார்களையும் பற்றிப் பல ஆராய்ச்சிக் கட்டுரைகளை எழுதினார். 1) சிவாச்சாரியார், 2) ஆதிசிவாச்சாரியார், 3) ஈசுவராச்சாரியார், 4)ஆதி ஈசுவராச்சாரியார், 5) பரமாச்சாரியார், 6) ஆதிபரமாச்சாரியார், 7) சங்கராச்சாரியார், 8) ஆதிசங்கராச்சாரியார் என்ற எண்மரைப் பற்றியும் 'இந்துமத மண்டபத்தின் எட்டுத் தூண்கள்' என்ற தலைப்பில் சிறப்புக் கட்டுரைகள் பல எழுதியுள்ளார்.

**தமிழர்கள் காலடி ஆதிசங்கராச்சாரியாரை மறந்தார்கள், ஏமாந்தார்கள்:-**

"எந்தை பதினோராவது பதினெண்சித்தர் பீடாதிபதி சிந்தை நொந்து பிறமண்ணினரான பிருமணர் எனப்படும் வட ஆரியரின் விந்தைமிகு திறமையின் விளைவுகளால் தமிழர்கள் எப்படியெல்லாம் மிக எளிதாக ஏமாற்றப் பட்டுவிட்டார்கள் என்பதை விளக்கிக் கூறியனவற்றை நினைத்து நினைத்துத்தான் நான், அரிய பெரிய பணிகளைத் தொடர்ந்து ஆற்றி வருகிறேன். அதாவது, பத்தாவது பதினெண்சித்தர் பீடாதிபதி இசுரவேல் நாட்டு தேவகுமாரனை வளர்த்தது போல் எந்தை சேரநாட்டுத் தேவகுமாரப் பதிலி ஆலப்புழை யாற்றங்கரையில் (சூர்ணு, பூர்ணு, ஆலவாய்ப்புழை) உள்ள காலடியில் தோன்றிய ஆதிசங்கராச்சாரியாரை அருளாளராகத் தயாரித்தார்.

ஆனால், இசுரவேல் நாட்டார்கள் தேவகுமரன் ஈசனை (ஈசுவரன் → ஈசா → ஏசா → ஏசு) உலகம் என்றென்றும் நன்கு நினைவு படுத்திக் கொள்ளுமளவு அவனுடைய வாழ்வியல் தொடர்பான இடங்கள், அவனுடைய தோற்ற வடிவமைப்பு, அவன் உதிர்த்த வாய்வார்த்தைகள், அவன் காலத்திய மனிதர்கள், இடங்கள், பழமையான நிகழ்ச்சிகள் முதலிய அனைத்தையும் குறித்துத் தொகுத்து வைத்துள்ளார்கள். அவர்களைப் போல், பத்தாவது பதினெண்சித்தர் பீடாதிபதியைப் பற்றிய வாழ்நாள் குறிப்புக்களைத் தமிழர்கள் தொகுத்துக் காத்து வைக்கவில்லை.

அதுகூடப் பாதகமில்லை; எந்தையார் இந்தியா முழுதுமுள்ள பிறமண்ணினரான பிருமணர் எனப்படும் வட ஆரியர்களைத் திருத்துவதற்காக உருவாக்கப் பட்ட காலடி ஆதிசங்கராச்சாரியாரின் தோற்ற வடிவம், வாய்வார்த்தைகள், வாழ்வியல் தொடர்பான சிந்தனைகள், மனிதர்கள், இடங்கள், நிகழ்ச்சிகள் முதலியவைகளை யெல்லாம் குறித்துத்

தொகுத்துப் பாதுகாத்து வைக்காமல் போய்விட்டார்கள். இதற்கு என்ன செய்வது?!

உச்சிக் குடுமியராக, குறுந்தாடி முடியுடையவராக, வெள்ளாடை மேனியராக இமயம் முதல் குமரி வரை இரண்டு முறைகளுக்கு மேல் நாடறிய ஞான உலா வந்த ஆதிசங்கராச்சாரியாரையே புத்த பிட்சு போல் மொட்டையடித்துக் காவிகட்டி முக்காடிட்ட கோலத்தராக்கிப் பிருமண குல ஆச்சாரியாராக்கி விட்டார்களே இந்த வட ஆரியர்கள். இவர்கள், துணிந்து இப்படி மாபெரும் பொய்மைகளை உருவாக்கியதை எண்ணி வியப்பதா? அல்லது இவர்கள் இதைக் கூறினாலும் அதை அப்படியே நம்பி ஏற்றுக் கொள்ளும் தமிழர்களை எண்ணி வேதனை யடைவதா? என்றே புரியவில்லை.

'... தமிழிலுள்ள சாத்திர தோத்திர அத்திறங்களைப் பிருமணர்களும் புரிந்து கொள்ளுமாறு ஆதிசங்கராச்சாரியாரைச் சமசுக்கிருத மொழியில் சுருக்கமான பத்தி இலக்கியங்களை எழுதக் கட்டளையிட்ட தாம் உயிர் வாழும்பொழுதே இந்தப் பிருமணர்கள் ஆதிசங்கராச்சாரியார் சமசுக்கிருதத்தில் எழுதியவை அனைத்தும், வட ஆரிய வேதங்கள், உபநிடதங்கள், சுருதிகள், ஆகம ஆரண மீமாம்சைகள் முதலியவைகளிலிருந்து எழுதப்பட்ட சாரமேயாகும் என்று துணிந்து புனைந்து பொய் கூறுவதை எதிர்த்துப் போராடுவதோ போரிடுவதோ எளிதல்ல! எளிதல்ல! எளிதல்ல! எளிதேயல்ல!

மேலும், இந்தப் பிருமணர்களில் ஒவ்வொருவரும் தங்களுடைய இன ஒற்றுமைக்காகவும், ஒருமைப்பாட்டுக்காகவும், உயர்ச்சிக்காகவும், ஆட்சிக்காகவும் எத்தனை பெரிய தியாகத்தையும் செய்யத் தயாராக இருக்கிறார்கள் என்பதை எண்ணும் போது; இவர்களின் பிடியிலிருந்து தமிழர்களைக் காப்பது அரிது! அரிது! அரிது! அரிதினும் அரிது! அதாவது, இந்தப் பிறமண்ணினரான பிருமணர் எனும் வட ஆரியர்கள், எதை விலையாகக் கொடுத்தாவது தமக்குத் தேவையான தமிழினத் துரோகிகளையும் விரோதிகளையும் மிக எளிதில் தயாரித்து விடுவார்கள். எனவே, தமிழர்களில் முக்கால் பகுதிக்கு மேலாவது தமிழின விடுதலை, ஒற்றுமை, ஒருமைப்பாடு, சுயமரியாதை, தன்மானம், தன்னம்பிக்கை முதலியவற்றைப் பற்றோடும், பாசத்தோடும் சிந்தித்துச் செயல்படுபவராக உருவாக்கப் படல் வேண்டும். அப்பொழுதுதான் தமிழினத்தின் தாழ்ச்சிநிலை தொடர்ச்சிநிலை யாகிடாது....' என்று மிகத் தெளிவாகக் குறிக்கின்றார்.

ஆனால், இக் குருபாரம்பரிய வாசகப்படி எந்தையாலேயே செயல்பட முடியவில்லை; மற்றவராலும் செயல்பட முடியவில்லை....."

### கருவூர்த் தேவர் தமது எழுத்துக்களை மறையாகக் காத்ததற்கான காரணம்:-

கருவூர்த் தேவர் தமது குருபாரம்பரிய வாசகத்தில் "எந்தை உருவாக்கியவர்களிலேயே மிகச் சிறந்தவர், தலையாயவர் என்று கருதப்பட்ட ஆதிசங்கராச்சாரியார்தாம் முப்பத்திரண்டாவது ஆதிசங்கராச்சாரியாராகத் தோன்றியவர் என்பதற்கு அறிகுறியாகத் தமது 32வது வயதிலேயே அனைத்துச் சாதனைகளையும் போதனைகளையும் முடித்துச் சென்றடைந்த இமயமலைப் பகுதிக்கே நானும் சென்றடைய விரும்புகிறேன். என்னுடைய பணிகள் அனைத்துமே ஏட்டளவிலும், நாட்டளவிலும் சித்தர்களின் மெய்யான இந்துமதம் முற்றிலும் பட்டுப் போய்விடாமல் பாதுகாக்கக் கூடிய நிலையைத்தான் பெற்றிருக்கின்றன. அதிலும், இவை எல்லாம் அடுத்துத் தோன்றப் போகும் பன்னிரண்டாவது பதினெண்சித்தர் பீடாதிபதியின் கைக்கு முழுமையாகக் கிடைத்திடுமோ! கிடைத்திடாதோ! என்று கவலையுறவே செய்திருக்கின்றன என்னை.

எனவே, எல்லாச் சூழ்ச்சித் திறனும் படைத்த பிறமண்ணினரான பிருமணர் எனும்

வட ஆரியர்கள் கையில் சிக்கிக் கொள்ளாதவாறு வாழையடி வாழையாக அனைத்தையும் மறைகளாக, முறைகளாக, நெறிகளாக, வேதங்களாக, சித்தங்களாக, நாதங்களாக, போதங்களாக, ஓதங்களாக இலைமறை காயாக வாழச் செய்வதே எமது கடமையாகி விட்டது. மேலும் சீர்காழிச் சிவபாத இருதயரின் மகன் திருஞானசம்பந்தன் தான் அதே கருணீக்க சைவ வேளாளர் மரபில் சேரநாட்டுக் காலடியில் ஆதிசங்கரனாகத் தோன்றிச் செயல்பட்டிட்டான் என்ற ஒரே ஒரு பேருண்மை மட்டும் அடுத்துத் தோன்றப் போகும் 12வது பதினெண் சித்தர் பீடாதிபதிக்கு முழுமையாகக் கிடைத்தால் போதும்! போதும்! போதும்! அதைக் கொண்டு அவர் மற்ற அனைத்துப் பேருண்மைகளையும் கண்டுபிடித்து விடுவார்! கண்டுபிடித்து விடுவார்! கண்டுபிடித்து விடுவார்! அவற்றின் அடிப்படையில் அவர் கடலாழத்து முத்துச் சிப்பி போல் தமது செயல்திட்டங்களை உருவாக்கிடுவார். தனது வாழ்வையும் அடர்காட்டிடைச் சந்தனமாக ஆக்கிடுவார் ...” என்று குறிக்கிறார். இப்படி ஆதிசங்கராச்சாரியார் பற்றிக் கருவூர்த் தேவர் குறிக்கும் குறிப்புகள் மெய்யான இந்துமதத்தின் மலர்ச்சிக்கும், மறுமலர்ச்சிக்கும், வளர்ச்சிக்கும், வளவளர்ச்சிக்கும், ஆட்சிமீட்சிக்கும் பேருதவி புரிவனவாக இருக்கின்றன. எனவேதான், ‘தமிழர்களின் தாழ்ச்சி நிலை தொடர்ச்சி நிலையாவது ஏன்?’ என்ற தலைப்பின் கீழ் யார் எதைச் சிந்தித்தாலும் அதில் கருவூர்த் தேவரின் குருபாரம்பரிய வாசகங்கள் முதன்மையான இடத்தைப் பெறுகின்றன.

**திருமாளிகைத் தேவரின் குருபாரம்பரிய வாசகங்களிலிருந்து:-**

“... இந்த மண்ணுலகோடு, இந்த மண்ணுலகுக்குரிய முதல் நிலவு இம் மண்ணுலகுடனேயே வந்து ஐக்கியமாகித் தோன்றிய நிலவுக் கண்டமும், இம் மண்ணுலகுக்குரிய இரண்டாவது நிலவு பல பகுதிகளாகச் சிதைந்து இம்மண்ணுலகோடு வந்து ஐக்கியமாகி உருவான பல தீவுகளும் சில நாடுகளும் என்னைக் கவர்ந்திழுப்பது போல்; இந்தியா என்னைக் கவர்ந்திழுக்க வில்லை. எனவே, என் தாத்தா சோழப் பேரரசின் தந்தையாகிய சித்தர் காவிரியாற்றங்கரைக் கருவூரர் தான் கட்டிய தஞ்சைக் கோயிலின் நிலவறைக்குள்ளேயே சென்று மறைந்தது போலவோ!? அல்லது எந்தை கருவூர்த் தேவர் தனது தந்தை உருவாக்கிய 32வது ஆதிசங்கராச்சாரியார், உச்சிக் குடுமியான், வெள்ளாடை மேனியான், மாந்தரீக வல்லி, தாந்தரீக சித்தியாளன், தேவகுமாரப் பதிலி, சீர்காழிக் கருணீக்க சைவ வேளாள மரபு பெற்றெடுத்த சமயக் குரவர், திருஞான சம்பந்தரின் மறுபிறப்பு, சேரநாட்டுக் காலடி கருணீக்க சைவ வேளாளக் குலத்துத் திருத்தோன்றல், காலடி ஆதிசங்கராச்சாரியார் சென்றடைந்து நிறைவு பெற்ற இமயமலைச் சாரலுக்குச் சென்று நிம்மதி பெற விரும்புவது போலவோ!? நான் தமிழினத்துக்காகவோ அல்லது பதினெண் சித்தர்களின் மெய்யான இந்துமதத்துக்காகவோ, நிலையான முழுமையான சாதனை எதனையும் சாதிக்காமல் இந்தத் தமிழ் இந்தியாவுக்குள், சித்தர் நெறி இந்தியாவுக்குள், மெய்யான இந்துமத இந்தியாவுக்குள் இருக்கவே விரும்பவில்லை! விரும்பவில்லை! விரும்பவில்லை! விரும்பவே இல்லை!

எனவேதான், இம்மண்ணுலகுக்குரிய முதல் நிலவு [இன்றைக்கு இருக்கும் நிலவு நான்காவது நிலவு எனவும், ஏற்கெனவே மூன்று நிலவுகள்

இருந்து அழிந்து போய்விட்டன எனவும் செய்திகள் குருபாரம்பரியத்திலிருந்து கிடைக்கிறது] நெருப்புப் பிழம்பாகி இம்மண்ணுலகின் நீர்ப்பரப்பின் பெரும் பகுதியைக் குடித்துத் தனது தாகத்தைத் தணித்துக் கொண்டு தோன்றிய நிலவுக் கண்டத்தின் அருகிலுள்ள மாரிகாளித் தீவில் (மார்காய் தீவு = Margoy Island) தங்கிக் கடலுள் இருக்கும் அவ்விரண்டு சிலைகளுக்கும் புத்துயிர்ப்பு வழங்கும் பணியில் ஈடுபடப் போகிறேன்.

இந்தச் சூழ்ச்சிக் காரப் பிறமண்ணினரான பிருமணர்கள், காலடியில் தோன்றிய 32வது ஆதிசங்கராச்சாரியாராகிய கருணீக்க சைவ வேளாளத் தமிழனைப் பிருமணனாக்கியது போல் என்னையும் பிருமணனாக்கி எந்தக் கூத்தடித்தாலும் எனக்குக் கவலையில்லை. என் தாய்த் தமிழ்நாட்டுத் தாயினத் தமிழர்களை என்றைக்குமே திருத்த முடியாது! திருத்த முடியாது! திருத்த முடியாது! திருத்தவே முடியாது! இவர்கள் அறிவு மயங்கி, ஆண்மை ஒடுங்கி, சுயமரியாதை இழந்து, தன்னம்பிக்கை நலிந்து, உரிமை மறந்து என்றென்றும் பிருமன அடிவருடிகளாக, அடிமைகளாக, கூலிகளாக, எடுபிடிகளாக, காவலர்களாக, ஆதரவாளர்களாக, ஏமாளிக் கோமாளிகளாகத்தான் வாழ்ந்து வருகிறார்கள். எனவே, நான் என் காலத்தையும் கருத்தையும் முயற்சியையும் உழைப்பையும் ஆற்றலையும் ஆர்வத்தையும் வீணாக்க விரும்பவில்லை! விரும்பவில்லை! விரும்பவில்லை! விரும்பவேயில்லை! அடுத்துத் தோன்றப் போகும் பன்னிரண்டாவது பதினெண் சித்தர் பீடாதிபதி அருளாட்சி அமைப்பதற்காக நிலவுக் கண்டத்தில் நீள்தவம் நிகழ்த்தப் போகிறேன்! நிகழ்த்தப் போகிறேன்! நிகழ்த்தப் போகிறேன்!"

**பிருமணரின் உகப் புரட்டு:-**

**திருமாளிகைத் தேவரின் குருபாரம்பரிய வாசகம்:-**

"இந்தப் பிருமணர்கள் இந்தியா முழுவதுமுள்ள தங்களைத் திருத்துவதற்காகத் தங்களுடைய தாய்மொழியான சமசுக்கிருத மொழியின் மூலம் செயல்படுமாறு உருவாக்கப்பட்ட கருணீக்க சைவ வேளாள மரபில் தோன்றிய 32வது ஆதி சங்கராச்சாரியாராகிய காலடி ஆதி சங்கராச்சாரியாரையே பிருமணர் என்று அறிவித்து விட்டார்கள். இது இவர்களுக்கு மிகமிகச் சாதாரண சுலபமான எளிய ஒரு செயல். ஆனால், இவர்கள் நாயன்மார்களும், ஆழ்வார்களும், சித்தர்களும், இருடிகளும், முனிவர்களும், அண்டபேரண்டமாளும் அருளுலக ஆட்சி மொழியான அமுதத் தமிழில் இயற்றிய அத்திற சாத்திற சூத்திற தோத்திற நேத்திற வேத்திறங்களின் சாரமாகத் தென்பாண்டித் தமிழன் கருணீக்கச் சைவ வேளாளத் தவக்கொழுந்து சேரநாட்டுக் காலடி ஆதிசங்கரர் சமசுக்கிருத மொழியில் படைத்த பத்தி இலக்கியங்களை யெல்லாம் வட ஆரிய வேதநெறிக்கு உரியவைகள் என்று கதைகட்டிச் சாதித்து விட்டார்கள்.

**ஆதிசங்கரர் எழுதியவைகளுக்கு அடிப்படை தமிழிலக்கியங்களே :-**

உலகியலில் நான்கு யுகங்களாகத் தமிழர்கள் உணரும் வண்ணம் ஈசுவராச்சாரியார்களில் 48 பேரும், ஆதிபரமாச்சாரியார்களில் 48 பேரும், சிவாச்சாரியார்களில் 48 பேரும், ஆதிசிவாச்சாரியார்களில் 48 பேரும், சங்கராச்சாரியார்களில் 40 பேரும், ஆதிசங்கராச்சாரியார்களில் 31 பேரும் தமிழர்களில்தான் தோன்றி யிருக்கிறார்கள். இவ்வளவு பெரிய நெடிய முறையான

பட்டியலால் எண்வகை ஆச்சாரியார்களும் தமிழினத்தில்தான் தோன்ற முடியும் என்ற பேருண்மை உள்ளங்கை நெல்லிக் கனியாக, வெள்ளிடை மலையாக விளக்கப் பட்டிருக்கிறது. இப்படி மிகத் தெளிவாகக் குருபாரம்பரியம் செயல்பட்டும் கூட; இந்தத் தமிழர்கள் சீர்காழிச் சிவபாத இருதயரின் வழிவந்த சேரநாட்டுக் காலடி சிவாச்சாரியார் சிவகுருவின் மகனாகத் தோன்றிய ஆதிசங்கராச்சாரியாரை வட ஆரியர்கள் சூழ்ச்சியாகத் தங்களுடைய இனத்தைச் சேர்ந்தவர் என்று அறிவித்ததை ஏற்றுக் கொண்டு விட்டார்கள். எந்தத் தமிழனும் அறிவுத் தெளிவோடும், உணர்வுத் துணிவோடும் 31 ஆதிசங்கராச்சாரியார்கள் தமிழினத்தில் தோன்றியிருக்கும் பொழுது, இந்த 32வது ஆதிசங்கராச்சாரியார் மட்டும் எப்படிப் பிறமண்ணினரான பிருமணர் எனும் வட ஆரியர் இனத்தில் தோன்றுவார் என்று கேள்வி கேட்டிட முன்வர வில்லை! முன்வர வில்லை! முன்வர வில்லை! முன்வரவே இல்லை!

இதைவிட, எல்லோருமறியத் தமிழினத்தில் கருணீக்க சைவ வேளாள மரபில் தோன்றிய சிவகுரு என்பவர், சீர்காழிக் கோயிலில் திருத்தொண்டு ஆற்றிக் கொண்டிருந்த தமிழ் அந்தணக் குடும்பத்திலிருந்து பிரிந்து சென்றே சேரநாட்டுக் காலடியில் குடியேறியவர் என்ற பேருண்மை எல்லோருக்கும் தெரியும். ஆனால், சிவகுருவைச் சேரநாட்டுக் காலடியிலேயே வாழ்ந்திட்ட ஒரு பிருமணக் குடும்பத்தைச் சேர்ந்தவர் என்று துணிந்து இந்தப் பிருமணர்கள் கதைகட்டி விட்டார்கள். இதைப் பார்த்தால், என்னையும் எந்தையையும், என் தாத்தாவையும் கூட பிறமண்ணினரான பிருமணர் எனப்படும் வட ஆரிய இனத்தைச் சேர்ந்தவர்கள் என்று கூடக் கதைகள் கட்டி விடுவார்கள் இந்த வட ஆரியர்கள். அதையும் என் தாய் நாட்டு அப்பாவி ஏமாளித் தமிழர்கள் ஏற்றுக் கொண்டால் கூட ஆச்சரியப் படுவதற்கில்லை.

இப்படிப்பட்ட கள்ளங் கபடமற்ற, ஏமாளிப் பண்பு மிக்க அச்சமிகு அடிமைப்போக்குடைய என் தாயின மக்களை எப்படித் திருத்துவது? எப்போது திருத்துவது? என்ற ஏக்கத்தால் ஏற்படும் துக்கத்தில்தான் நான் இருந்த இடம் தெரியாமல் போய்விடுகிறேன். எனவேதான், தமிழகத்து நிலவறைக்குள்ளோ, அல்லது காடு மலை குகைகளிலோ, இமய மலைச் சாரலிலோ தங்குவது எனக்கு அமைதியைத் தராது. நானே, நேரில் சென்று இமயமலைச் சாரலில் இருந்து 32வது ஆதிசங்கராச்சாரியாரை அழைத்து வந்து அவர் சமசுக்கிருதத்தில் எழுதியவை அனைத்தும் பதினெண் சித்தர்கள் மெய்யான இந்துமதத்திற்காக தமிழில் எழுதியவைகளின் சாரமே என்று அவரையே கூறச் செய்தாலும் கூட எனது தாய்த்திரு நாட்டு மக்கள் ஒப்புக் கொள்ள மாட்டார்கள். (இதன் மூலம் ஆதிசங்கராச்சாரியார் இமயமலைச் சாரலில் நீள்தவத்தில் பதினெட்டுப் படைவீடுகளில் எழுந்தருளியிருக்கும் முருகப் பெருமானின் பதிலியாக இந்த உலக முடிவு வரை இருந்திடுவார் என்ற பேருண்மை தெளிவாகின்றது.) இவர்கள் ஒப்புக் கொண்டாலும்கூட; உடன் பிறந்தே கொல்லும் நோய் போல இந்த நாட்டுக்கு வந்து சேர்ந்து இந்துமதத்திற்கு நோயாக வாழுகின்ற பிறமண்ணினரான பிருமணர் எனும் வட ஆரியர்கள் ஒப்புக் கொள்ள மாட்டார்கள்.

**காலடி ஆதிசங்கராச்சாரியார் சமசுக்கிருதத்தில் எழுதியதின் பின்விளைவு:**

என் தாத்தா, தன் காலத்தில் தோன்றிய தென்பாண்டித் தமிழன் காலடி ஆதிசங்கரனை முழுமையாகப் புரிந்து 32வது ஆதி சங்கராச்சாரியாராகத் தயாரித்தார். அப்படித் தயாரிக்கப் பட்ட 32வது ஆதிசங்கராச்சாரியார்

தெய்வத் தமிழில் மிகப்பெரிய புலமை பெற்றிருந்தும், பிறமண்ணினரான பிருமணர் எனும் வட ஆரியரைத் திருத்துவதற்காக அவர்களுடைய சமசுக்கிருத மொழியிலேயே புலமையை வளர்த்துக் கொண்டு செயல்பட்டிட்டார். ஆனால், விளைவு என்ன ஆயிற்று? 43,72,236 ஆண்டுகளாக (இந்து மதம் தோன்றி இப்போது 43,73,086 ஆண்டுகள்; 1986 - 1136 = 850 ஆண்டுகளுக்கு முன் இது எழுதப் பட்டது. எனவே, 43,72,236 ஆண்டுகளுக்குப் பின் திருமாளிகைத் தேவர் இவ்வாசகத்தை எழுதினார். வரலாற்றின்படி, கி.பி.1136. இந்தக் கணக்கின்படி குருபாரம்பரியத்திலுள்ள காலக் கணக்கீடு சரியாக இருக்கிறது) வளர்ந்து வந்த இந்துமதத்திற்கு விரோதியாகவும், துரோகியாகவும், எதிரியாகவும்; சமசுக்கிருத மொழியின் மூலம் வட ஆரிய மாயைகளை வளர்த்துத் தமிழினத் தாழ்ச்சியைத் தொடர்ச்சி நிலையாக்கிடும் ஒரு பிருமணராகவே கற்பனையாகச் சித்தரிக்கப் பட்டு விட்டார் அவர். இந்தக் கற்பனையை அவரைத் தயாரித்த என் தாத்தாவாலேயே அகற்ற முடியவில்லை அல்லது உடைத்தெறிய முடியவில்லை. எனவே, என்னையும் இந்தப் பிருமணர்கள் ஒரு பிருமணனாகச் சித்தரித்துத் தமிழினத் துரோகியாக, விரோதியாக, எதிரியாக, வட ஆரிய மாயாவாதியாக, சமசுக்கிருத வெறியனாக சித்தரிக்கப் படுவதற்கு முன்னால் தப்பித்துக் கொள்ள விரும்புகிறேன் நான்.

---



## இந்தக் கட்டுரைகள் தொடர்பான காலக் கணக்கீடு:

**1) 11வது பதினெண்சித்தர் பீடாதிபதி அவர்கள் தஞ்சைப் பெரிய கோயிலைக் கட்டியவர், பிற்காலச் சோழப்பேரரசின் தந்தை, இராசராச சோழனின் அரசகுருவும் இவரே. இவரது சிலையே தஞ்சைப் பெரியகோயில் கோபுரத்தின் பின்புறத்தில் உள்ள தனி மண்டபக் கருவறையில் உள்ளது. இவரை இன்று தவறுதலாக 'சித்தர் கருவூரார்' என்று அங்கே பெயர் எழுதி வைத்துள்ளனர். குருபாரம்பரியப் படி இவரை 'சித்தர் காவிரியாற்றங்கரைக் கருவூறார்' என்றே வழிபட வேண்டும். இவரது காலம்: கி.பி. 785 முதல் கி.பி. 1040 வரை. இவரே கி.பி. 8ஆம் நூற்றாண்டில் காலடி ஆதிசங்கராச்சாரியாரை ஓர் அருளாளராக, 32வது ஆதி சங்கராச்சாரியாராகத் தயாரித்தார்.**

**2) கருவூர்த் தேவர் என்பவர் 11வது பதினெண்சித்தர் பீடாதிபதி அவர்களின் திருமகனார் ஆவார். இவரது காலம்: கி.பி.1002 முதல் கி.பி. 1182 வரை.**

**3) திருமாளிகைத் தேவர் என்பவர் கருவூர்த் தேவர் அவர்களின் திருமகனார், சித்தர் காவிரியாற்றங்கரைக் கருவூறார் அவர்களின் பேரன். இவரது காலம்: கி.பி.1041 முதல் 1137 வரை. இவர் 'உடையவர்' எனப்படும் இராமானுஞ்சாச்-சாரியார் அவர்களின் நண்பர்.**

பின்குறிப்பு: இந்த அறிக்கையில் வழங்கப் பட்டுள்ள ஆதிசங்கராச்சாரியாரின் திருவுருவப் படங்கள் எல்லாம் பிருமணர்கள் பொய்யாக விளம்பரப் படுத்தி நிலைநாட்டிய ஓவியங்களின் அடிப்படையில் உள்ளன. உண்மையான திருவுருவப் படங்கள் இன்று நாட்டு வழக்கில் இல்லவே இல்லை.